# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 31.08.2023 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

# கூட்டப்பொருள்

<table>
<tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் பழுது அகற்றவும், பழுதான சின்டெக்ஸ் டேங்குகளை மாற்றிவிட்டு புதியதாக மாற்றவும், பழுதான பைப்லைன்களை மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.90 லட்சம் ஆகும் இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மான எண்: 665<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>2</td><td>திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் இயங்கி வரும் 5KVA, 2KVA, 2nos, 3KVA , 2nos, UPS களை வருடாந்திர பராமரிப்பு மற்றும் பழுது பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.0.80 இலட்சம் ஆகும். இப்பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீடு விழுக்காடு %</td></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">திருப்பூர் மண்டல அலுவலகத்தில் உள்ள பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி சாதனங்களில் ஆண்டு பராமரிப்பு மற்றும் பழுது சரி செய்தல் பணி</td><td rowspan="3">ரூ.0.80 இலட்சம்</td><td>திருவாளர்.சிஸ்கான் சிஸ்டெம்ஸ்</td><td>ரூ.78,411/-</td></tr>
<tr><td>திருவாளர்.சாகர் எலக்ட்ரானிக்ஸ்</td><td>ரூ.84,488/.</td></tr>
<tr><td>திருவாளர்.ஸ்ரீ ஹைகிர்வா கம்யூட்ர்ஸ்</td><td>ரூ.83992.40/-</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் சிஸ்கான் சிஸ்டெம்ஸ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.580/2023/இ1<br>தீர்மான எண்: 666<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

3

மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்வி நிதி 2023-2024ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 02.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16 பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கழிப்பிடத்தில் மாரமத்து பணிகள் செய்தல் மற்றும் இதர பணிகள் செய்தல் | ரூ.5.00 | திரு.V.செல்வராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.N.ஜெகநாதன் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.V.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :மேற்க்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.581/2023/இ1

தீர்மான எண்: 667

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

4

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் குழாய் திருப்புநர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் காவலர் பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.14 இலட்சத்திற்கு நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 02.082023 அன்றுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் குழாய் திருப்புநர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் காவல் பணி மேற்கொள்ளுதல் | ரூ.14.00 இலட்சம் | திருவாளர். M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.M.வேலுசாமி | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.582/2023/இ1

தீர்மான எண்: 668

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

5 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி, பொதுநிதி, 2023-2024ன் கீழ்க்கண்ட பணிகளுக்கு 26.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 29 சபரி பாலாஜி நகர் மற்றும் வார்டு எண் 30 நியூ அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் பகிர்மானக் குழாய் அமைத்தல் | ரூ.2.00 இலட்சம் | திரு.M.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.C.நாகராஜ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 10 ஆணையாளர் குடியிருப்பில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.6.50 இலட்சம் | திரு.G.K.S சேதுபதி | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்: 669

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6 மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் தற்போது 72 ஆழ்குழாய் கிணறுகளின் மூலம் மின் விசைபம்பு அமைத்து பொது மக்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது மின்விசைபம்பு தொடர்ந்து பழுதாகி வருகின்ற காரணத்தால் நீர் விநியோகம் முறையாக வழங்க இயலவில்லை. மேலும், நகராட்சியில் கூடுதல் பம்பு (Standby) ஏதும் இல்லை. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி கூடுதல் பம்பு 5 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட் மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்: 670

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 21 கெண்டையூர், காமராஜ் நகர் மற்றும் ஏ.டி. காலனி பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் பிளாட்பார்ம் அமைக்க ஆகும் தோராய செலவினம் 3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.582/2023/இ1

தீர்மான எண்: 671

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr><td>8</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று குடிநீர் திட்டங்களிலும் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய்களில் உடைப்புகளை சரிசெய்யவும், பொதுக் குழாய், பொது கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும், தற்போது சாலை வசதி மற்றும் பாதாளசாக்கடை பணிகள் நடைபெறுவதால் அடிக்கடி உடைப்புகள் ஏற்படுவதை சரிசெய்யவும் உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.582/2023/இ1<br>தீர்மான எண்: 672<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>9</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகளை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் உள்ள வால்வுகளை பாதுகாக்க வால்வு Pit கள் அமைக்க வேண்டியுள்ளது. தற்போது சாலை பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ஆகியவை நடைபெற்று வரும் காரணத்தால் வால்வுபிட்கள் அதிக அளவில் சேதம் அடைகிறது. இதனை புதுப்பிக்க மற்றும் புதியதாக வால்வு Pit கள் அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.582/2023/இ1<br>தீர்மான எண்: 673<br>தீர்மானம் : ஒத்திவைக்கப்பட்டது.</td></tr>
<tr><td>10</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கீழ் இயங்கி வரும் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணிகளுக்கு திட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து அறிவுசார் மையம் மற்றும் நூலகங்களில் ஒரே சீரான கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக ஏற்கனவே மாதிரி கட்டிட வரைபடங்கள் (Type Design) மற்றும் மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அவ்வாறே பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படி மையங்களுக்கு தேவையான Interactive Smart Board கொள்முதல் செய்ய உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டது போக அதிகமாகும் தொகையினை நகராட்சி கல்விநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் உரிய விதிமுறைகளை பின்பற்றி மேற்படி கொள்முதல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 29 மணிநகர் பள்ளியின் எதிரில் புதியதாக கட்டப்பட்டுள்ள அறிவுசார் மையத்திற்கு Interactive Smart Board கொள்முதல் பணி மேற்கொள்ள 03.08.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டு, 10.08.2023 அன்று கீழ்க்கண்ட விலைப்புள்ளி வரப்பெற்று ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விலை %</th></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 29 மணிநகர் பள்ளியின் எதிரில் புதியதாக கட்டப்பட்டுள்ள அறிவுசார் மையத்திற்கு Interactive Smart Board கொள்முதல் பணி</td><td>1,திருவாளர்K.S.Smart solutions pvt.ltd</td><td>ரூ.2,97,950/-</td></tr>
<tr><td>2.திருவாளர்.Cannan International Chennai</td><td>ரூ.3,30,990/-</td></tr>
<tr><td>3.திருவாளர்.Alpha Trading Company Chennai</td><td>ரூ.3,46,330/-</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் K.S. Smart Solutions Pvt. Ltd கொடுத்துள்ள திருவாளர். K.S. Smart Solutions Pvt. Ltd அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மான எண்: 674<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் மணிநகர் பகுதியில் மணிநகர் நகராட்சி பள்ளிக்கு எதிர்புறம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-2023 யின் கீழ் அறிவுசார் மையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த இடமானது அனுகுசாலையை விட மிகவும் பள்ளமாக உள்ளது மேலும் இவ்விடத்தின் மேற்பகுதியில் அமைந்துள்ள தனியார் இடம் மிகவும் பள்ளமாக உள்ளது. அறிவுசார் மையத்தில் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் சுற்றுசுவர் அமைக்கப்பட வேண்டியுள்ளது ஆனால் அருகில் உள்ள இடம் மிகவும் பள்ளமாக உள்ளதால் இப்பகுதிக்கு தடுப்புசுவர் கட்ட வேண்டியுள்ளது. சுமார் 8 அடி உயரம் வருவதால் சிமெண்ட் கான்கரீட் கொண்டு தடுப்பு சுவர் அமைக்கப்பட வேண்டும். அறிவுசார் மையக்கட்டிடம் விரைவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ள நிலையில் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் திருப்பூர்அவர்களால் 8.8.2023 யில் நேரடி ஆய்வின் போது சுற்றுச்சுவர் மற்றும் அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டது. எனவே, மேற்படி இடத்தின் மேற்கு மற்றும் வடக்கு பகுதியில் தடுப்பு சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 17.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும், அறிவுசார் மையக் கட்டிடம் விரைவில் திறக்கப்பட உள்ளதால் இப்பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மான எண்: 675<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் மணிநகர் பகுதியில் நகராட்சி பள்ளிக்கு எதிர்புறம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-2023 யில் அறிவுசார் மையம் கட்டப்பட்டு வருகிறது அறிவுசார் மையத்தின் கீழ்புறம் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. அறிவுசார் மையத்தின் வாகன நிறுத்துமிடத்திற்கு Paver Block தளம் மற்றும் மேற்கொள்ள அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இக்கட்டிடம் விரைவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது. இந்நிலையில் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களின் 8.8.2023யின் நேரடி ஆய்வின் போது இப்பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டது.<br>எனவே மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம்கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 7.70 இலட்சத்திற்கும் வாகன நிறுத்துமிடத்திற்கு Paver Block தளம் மற்றும் மேற்கூரை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் அனுமதிக்கும் செயற்கை நீர் ஊற்று மற்றும் சிமெண்ட் தளம் அமைக்க ரூ.5.30 இலட்சத்திற்கும் அனுமதிக்கும். மேலும் இக்கட்டிடம் விரைவில் திறக்கப்படவுள்ளதால் இப்பணிகளை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மான எண்: 676<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தீன்தயாள் அந்தோதயா யோஜனா 2016–2017 (Day NULM 2016-2017) ன்கீழ் கூடுதல் இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 27061/2015/UPA-2, நாள் 27.03.2017 அவர்களின் செயல்முறை ஆணை கடிதத்தின்படி வார்டு எண் 16 அரசு மருத்துவமனை வளாகத்தில் வெளிப்புற நோயாளிகள் மற்றும் உறவினர்கள், உடன் இருப்பவர்களை தங்குவதற்கு கட்டிடம் கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி ரூ. 40.00 இலட்சத்திற்கு பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 09.08.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு மலையிட பாதுகாப்பு குழு (HACCA) அனுமதி வேண்டி அனுப்பப்பட்டது. மேற்கண்ட அனுமதி கோர அனுப்பப்பட்டதில் முதன்மை வன பாதுகாப்பு தலைமை அலுவலர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் TS4/42516/2019, நாள் 27.01.2020 ல் 300 ச.மீ. குறைவான கட்டிடங்களுக்கு மேற்கண்ட துறையின் அனுமதி தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதம் பெறப்பட்டு கட்டிட பணிகள் துவங்கப்படும் காலத்தில் மார்ச் 2020ன்படி கோவை மாவட்டத்தில் கொரோனா அதிகம் பரவிய காரணத்தால் தலைமை மருத்துவமனை பகுதி 2022வரை தனிமை படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தடை நீடிக்கப்பட்டது. இக்காலங்களில் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. மேலும் இப்பணியை எடுத்த ஒப்பந்ததாரர் பணி உத்திரவு 09.08.2018ல் வழங்கப்பட்டு தற்போது 5 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் கட்டுமான பொருள்களின் விலை ஏற்றம், ஆட்கள் கூலி மற்றும் GST சதவீதம் உயர்வு ஆகியவற்றால் ஏற்கனவே கொடுத்துள்ள விலை விகிதத்தில் இப்பணியை செய்ய இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ளது ஏற்கதக்கதாக உள்ளது. இப்பணிக்கு முழு மானியமும் விடுவிக்கப்பட்ட நிலையில், இப்பணி பொது மக்களுக்கு அத்தியாவசியம் ஆதலால் இப்பணியின் அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோர ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்து தற்போது உள்ள விலை விகிதத்தில் உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வேண்டி மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் அவர்களிடம் சமர்ப்பிக்க நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1218/2016/இ1<br><br>**தீர்மான எண்**: 677<br><br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 14 | இந்நகராட்சியில் இயங்கி வரும் இரண்டு நகல் இயந்திரங்களின் மூலம் ஜெராக்ஸ் நகல்கள், தட்டச்சு செய்யப்படும் கடிதங்கள், இ-மெயில் நகல்கள் மற்றும் அனைத்து அறிக்கைகளும் பிரிண்ட் எடுக்கப்பட்டு வரப்படுகிறது மேற்கண்ட இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணி மேற்கொள்ளவும் அவ்வப்போது உதிரி பாகங்கள் மாற்றம் வேண்டியுள்ளது. இப்பணிக்காக இவ்வாண்டிற்கான (2023-2024) உத்தேச செலவினமாக ரூ.2,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிகலாம்<br>ந.க.எண். 2322/2022/அ2<br><br>**தீர்மான எண்**: 678<br><br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 15 | அரசாணை (நிலை) எண்: 15 சிறப்புத்திட்டச் செயலாக்கத்துறை நாள்: 10.07.2023 அரசாணையின்படியும், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 2514/2023/பி1 நாள்: 14.07.2023 ன் படியும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்பட "விண்ணப்பப் பதிவு இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருதல் " என நகராட்சி ஆணையர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பப்பதிவு முகாம்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள 20 மையங்களில் பணிபுரியும் அலுவலர்கள் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு KRS ஸ்வீட்ஸ் மற்றும் நைனா கேட்ரிங் மூலம் தேநீர், மதிய உணவு ஆகியவை வழங்கவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கலாம்<br>2. கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்க ஏற்படும் செலவுத் தொகையை சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2587/2023/சி3<br><br>**தீர்மான எண்**: 679<br><br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கு துப்புரவுப் பணியினை மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க 11.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தத் தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>திருவாளர் வி.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன், சிறுமுகை.</td><td>ரூ. 5, 10, 000 /-</td></tr><tr><td>2</td><td>திருவாளர் ஜி,கே.எஸ், சேதுபதி, மேட்டுப்பாளையம்.</td><td>ரூ. 4, 99, 500 /-</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் ஜி,கே.எஸ், சேதுபதி, மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்**: 2695/2023/எச்1<br>**தீர்மான எண்**: 680<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை எஸ்.எஸ். பவுண்டேசன் மூலம் பணிமேற்கொள்ள பணியினை நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. நீட்டிப்பு செய்தது 23.08.2023ம் தேதியில் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனத்திற்கே அதே விலைப்புள்ளி விகிதத்திலேயே 24.08.2023 முதல் 60 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான EPF&ESI சேர்த்து தோராய செலவினம் ரூ. 646.50 x 68 x 60 = 2637720/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்**: 2530/2023/எச்1<br>**தீர்மான எண்**: 681<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 18 | இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் 20800 குடியிருப்புகள் உள்ளன. அதில் 300 வீடுகளுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 68 DBC பணியாளர்களை நியமித்து, அப்பணியினை எஸ்.எஸ். பவுண்டேஷன், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, கடந்த ஓராண்டு மேலாக பணிபுரிந்து வருகின்றார்கள். டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தம் புதிதாக கோரவும், 89 நாட்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்ய அதற்குண்டான தோராய செலவினம் ரூ. 728 x 68 x 89 = 4500000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><td>அடிப்படை ஊதியம்</td><td>(ரூ)<br>507/-</td></tr><tr><td>EPF & ESI 15.75%</td><td>80/-</td></tr><tr><td>GST 18%</td><td>91/-</td></tr><tr><td>நிர்வாக செலவினம் 10%</td><td>50/-</td></tr><tr><td>மொத்தம்</td><td>728/-</td></tr></table><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்**: 2695/2023/எச்1<br>**தீர்மான எண்**: 682<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

19 தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் ஜனவரி 2023 முதல் ஜீலை 2023 வரை உண்டான ஏழு மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.2,75,185/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மிகைநேரப் பணி | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஜனவரி 2023 | பிப்ரவரி 2023 | மார்ச் 2023 | ஏப்ரல் 2023 | மே 2023 | ஜீன் 2023 | ஜீலை 2023 |
| 1 | எஸ்.மகேஸ் குமார் | மின்பணியாளர் நிலை 4 | 64 | 32 | 32 | 56 | 48 | 40 | 32 |
| 2 | என்.கிருஷ்ண மூர்த்தி | கிளீனர் | 64 | 32 | 32 | 56 | 40 | 48 | 32 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 64 | 32 | 40 | 48 | 48 | 40 | 32 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 64 | 24 | 32 | 48 | 40 | 40 | 32 |

| வ. எண் | ஜனவரி 2023 | பிப்ரவரி 2023 | மார்ச் 2023 | ஏப்ரல் 2023 | மே 2023 | ஜீன் 2023 | ஜீலை 20223 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19,511 | 10,823 | 9,776 | 17,678 | 17,095 | 14,721 | 11,397 | 1,01,001 |
| 2 | 13,638 | 7,550 | 6,820 | 8,809 | 8,772 | 10,877 | 7,017 | 63,483 |
| 3 | 13,390 | 7,412 | 8,369 | 10,378 | 10,334 | 8,899 | 6889 | 65,671 |
| 4 | 9,829 | 4,081 | 4,914 | 7,777 | 6,504 | 6,721 | 5,204 | 45,030 |
| | ரூ.56,368 | ரூ.29,866 | ரூ.29,879 | ரூ.44,642 | ரூ.42,705 | ரூ-41,218 | ரூ.30,507 | ரூ.2,75,185 |

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 30.03.1989 ம் தேதிய ந.க.எண் 24372/89/ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஜனவரி 2023 முதல் ஜீலை 2023 வரை உண்டான ஏழு மாதங்களுக்கான மி கை நேரப்படி ரூ.2,75,185/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**: 5220/2011/இ1

**தீர்மான எண்**: 683

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 20 | 1.கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறையின் படி கோயம்புத்தூர் காந்திரம் ஜெயில் மைதானத்தில் 13.05.2023 முதல் 27.06.2023 வரை 7 நாட்கள் தடைபெற்று முடிந்த அரசுப் பொருட்காட்சியில் மேட்டுப்பாளையம் நகராட்சி சார்பாக உட்புரம் அரங்கு அமைத்ததற்கான பட்டியல் தொகை ரூ.33500/- யை Excellent Arts Chennai மூலம் பெறப்பட்டுள்ளது.<br>2.கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறையின்படி தமிழ்நாடு அரசின் விழிப்புணர்வு விளம்பர பணிகள் மற்றும் பதாகைகள் தொடர்பாக மேட்டுப்பாளையம் நகராட்சியில் பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் இடத்தின் முன்பு 29.03.2023 மற்றும் 12.05.2023 ஆகிய இரு தேதிகளில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.35518/- யை Shopnic Enterprise மூலம் பெறப்பட்டுள்ளது.<br>3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல் தொடர்பாக கோவை தினத்தந்தி பத்திரிக்கையில் 29.07.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தொகை Bright Advertising மூலம் ரூ.12978/- யை பெறப்பட்டுள்ளது.<br><table><tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை</td></tr><tr><td>1</td><td>Excellent Arts</td><td>33500/-</td></tr><tr><td>2</td><td>Shopnic Enterprise</td><td>35518/-</td></tr><tr><td>3</td><td>Bright Advertising</td><td>12978/-</td></tr></table>மேற்காணும் பட்டியியல் உள்ள நிறுவனங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>தீர்மான எண்: 684<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 2 சிறுமுகை மெயின் ரோடு சாலையில் செல்லும் 3 இஞ்ச் பகிர்மான குழாய் சங்கர் நகர் பள்ளிக்கு எதிரில் இருக்கிறது. தற்போது அதனை 180மீட்டர் நீட்டிக்கவும், அப்பகுதியில் 15 குடியிருப்புகள் இருப்பதால் போதுமான அளவு குடிநீர் கிடைக்காத சூழ்நிலை நிலவி வருகிறது. எனவே, அவ்விடத்தில் 3 இஞ்ச் பகிர்மான குழாய் 180 மீட்டர் நீட்டிப்பு செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.0.80 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியில் குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 582/2023/இ1<br>தீர்மான எண்: 685<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>22</td>
<td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்க்ண்ட பள்ளிகளில் தேவையான கூடுதல் வகுப்பு அறைகள், கழிவறைகள், ஆய்வுக்கூடம், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகிய பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><td>1</td><td>வார்டு எண் 29 மணிநகர் நகராட்சி பள்ளியில் ஆண்களுக்கான கழிவறைகள் கட்டுதல்</td><td>ரூ.15.00 இலட்சம்</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண் 18 காட்டூர் நகராட்சி பள்ளியின் கழிவறை குடிநீர் தரைமட்ட தொட்டி மற்றும் மேடைஅமைத்தல்</td><td>ரூ.20.00 இலட்சம்</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண் 29 மணிநகர் பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுதல்</td><td>ரூ.20.00 இலட்சம்</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண் 3 வள்ளுவர் நகராட்சி பள்ளியில் வகுப்பறை கட்டுதல்</td><td>ரூ.20.00 இலட்சம்</td></tr>
<tr><td>5</td><td>வார்டு எண் 29 மணிநகர் நகராட்சி பள்ளியில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல்</td><td>ரூ 6.00 இலட்சம்</td></tr>
<tr><td>6</td><td>வார்டு எண் 16 நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறை கட்டுதல்</td><td>ரூ.20.00 இலட்சம்</td></tr>
<tr><td>7</td><td>வார்டு எண் 16, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுதல்</td><td>ரூ.20.00 இலட்சம்</td></tr>
</table>
மேற்கண்ட பணிகள் அனைத்தும் மாணவர்களின் மிகவும் அவசியப்பணியாக உள்ளதால், கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்: 581/2023/இ1<br>
தீர்மான எண்: 686<br>
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>23</td>
<td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 S.M. நகர் பள்ளியில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது தற்போது பள்ளியில் இக்கட்டடத்தின் அருகில் பள்ளிக்கட்டிடம் உபயோகமில்லாமல் உள்ளது. எனவே, குழந்தைகளின் நலன் கருதி பள்ளிக்கட்டித்தில் அங்கன்வாடி செயல்பட அனுமதிக்கலாம். மேலும், இக்கட்டிடத்தில் கழிவறை மற்றும் குடிநீர் வசதி உடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
தீர்மான எண்: 687<br>
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>24</td>
<td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதி வார்டு எண் 4 மட்டக்காரத்தெரு செல்லும் 3 இஞ்ச் சிஜ பகிர்மான குழாய் தற்போது பழுதடைந்த நிலையில் இருப்பதால் அப்பகுதியில் 30 குடிநீர் இணைப்புகளுக்கு சரிவர குடிநீர் வரவில்லை அப்பகுதியில் சீராக குடிநீர் வழங்க பொதுமக்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் கோரிக்கை வைத்துள்ளனர். அதன் அடிப்படையில் மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. பழுதடைந்த 3 இஞ்ச் மெயின் 120 மீட்டர் மாற்ற வேண்டும். எனவே புதிய மெயின் அமைப்பதற்கும் ஏற்கனவே சென்று கொண்டு இருந்து மெயினில் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளை புதிய மெயின் பைப் இணைப்பில் மாற்றுவதற்கும் அதற்கான தோராய செலவு ரூ.0.70 இலட்சம் இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>
தீர்மான எண்: 688<br>
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | |
|---|---|
| 25 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 16, அண்ணா மார்கெட் பகுதியில் நடைபெற்று வரும் பொது கழிப்பிடத்தை நகராட்சிகளின் மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வின் போது மதிப்பீட்டில் இல்லாத சில பணிகளை அதாவது சுற்றுச்சுவர், Partition wall , நடைபாதை போன்ற சில பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.80 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.**<br>**தீர்மான எண்**: 689<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 26 | அண்ணா வணிக வளாக கடை எண் 27ஐ திருமதி.சுப்புலட்சுமி என்பவர் நடத்தி வந்தார் கடந்த 01.07.2022ல் நகராட்சி வசம் கடை ஒப்படைத்துள்ளார் எனவே, அவர் செலுத்திய வைப்புத் தொகை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேலும், அவர் செலுத்திய தொகை காலம் கடந்த வைப்புத் தொகை ( 4018-340 2001) 2020-2021 ம் ஆண்டு பதிவேடு (2016-2017) காலம் கடந்தது பக்கம் எண் 23 ல் (ரூ.1,00,000 + 1,00,000)= ரூ2,00,000/-<br>மற்றும் பக்கம் எண் 29 ல் ரூ. 2,17,200/-<br>பதிவு செய்யப்பட்டுள்ளது ரூ 4,17,200/-<br>மேற்படி தொகையில் 1.07.2022 முதல் 31.12.2022 வரை 6 மாதம் மற்றும் 01.01.2023 முதல் 12.01.2023 வரை 12 நாட்கள் வாடகை தொகை ரூ.1,33,206/-யை பிடித்தம் செய்து மீதம் உள்ள தொகை ரூ.2.83.994/- திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**தீர்மான எண்**: 690<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள தண்ணீர் தேக்க தொட்டி வால்வுகள் மற்றும் குடிநீர் விநியோக வால்வுகள் பழுதடைந்துள்ளதால் குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய இயலவில்லை அவசர அவசியம் கருதி பழுதான வால்வுகளை அகற்றி புதிய வால்வுகள் மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10 லட்சம் ஆகும் இப்பணியை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.**<br>**தீர்மான எண்**: 691<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

28 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2023-2024 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 18.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 8 பெருமாள் கவுண்டர் வீதி மற்றும் எஸ்.எம்.நகர் ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் பெட் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல் | ரூ.4.80 இலட்சம் | திருவாளர்.தம்பான் பில்டர்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்த 70 KVAR Capacitor மாற்றுதல் | ரூ.9.50 இலட்சம் | திருவாளர் Alchem Industries | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் Sree Power Engineers | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண் 29 மணிநகர் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் உள்ள காவலர் அறைக்கு வர்ணம் பூசுதல் மற்றும் சில மராமத்து பணிகள் செய்துல் | ரூ.1.20 இலட்சம் | திரு.சி.நாகராஜ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் Plumb bob கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | வார்டு எண் 8,9,25,28,33 ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் பெட் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல் | ரூ.9.90 இலட்சம் | திருவாளர் Dilip Infra | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண் 10,19,22,29 ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் பெட் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல் | ரூ. 9.90 இலட்சம் | திருவாளர்.Plumb Bob கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.C.நாகராஜ் | 4.97 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6 | வார்டு எண் 4,9,13,23 ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் பெட் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல் | ரூ.8.00 இலட்சம் | திருவாளர் M3 Engineering Construction | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 7 | வார்டு எண் 18, 30 மற்றும் 33 ஆகிய பகுதிகளில் பகிர்மானக் குழாய்களில் Interlink அமைத்து குடிநீர் வழங்குதல் | ரூ.4.30 இலட்சம் | திரு.M.வேலுசாமி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.C.நாகராஜ் | 4.96 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 8 | வார்டு எண் 31 பாரதி நகர் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கழிவு நீர் குழாய் அமைத்தல் | ரூ.0.50 இலட்சம் | திரு.M.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.C.நாகராஜ் | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை பகுதியில் பாதாள சாக்கடை பணிக்கு தோண்டப்பட்ட இடங்களில் தார்சாலை அமைத்தல் | ரூ.20.00 இலட்சம் | திரு.V.செல்வராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.டி.ராதா கிருஷ்ணன் | 4.97 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 10 | நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் OCEMS பொருத்த பாதுகாப்பு மேற்கூரை அமைத்தல் | ரூ.0.65 இலட்சம் | திரு.C.நாகராஜ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.M.வேலுசாமி | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 692

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 29 | **நகர்மன்றக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட மன்றப் பொருள்**<br>மேட்டுப்பாளையம் நகராட்சி பழைய அலுவலகக் கட்டிடத்தில் ஆதரவற்றோர் மற்றும் மனநலம் குன்றிய நபர்களுக்காக அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 520/2020/அ4 நாள் 17.06.2021ல் உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட மையம் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக செயல்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு மேற்கண்ட தன்னார்வ தொண்டு நிறுவனமான Helping Hearts நிறுவனத்திற்கும் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கும் 01.08.2023 முதல் ஐந்தாண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>தீர்மான எண்: 693<br>தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 30 | **நகர்மன்றக் கூட்டத்தில் திருமதி.எஸ்.அனிதா நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண் 28 அவர்களால் கொண்டு வரப்பட்ட மன்றப் பொருள்.**<br>28வது வார்டுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அக்ஸா பள்ளிவாசல் 2014 அன்று கட்டும் பொழுது, அப்பொழுது இருந்த நகராட்சி நிர்வாகம் அப்பள்ளிவாசல் மீது மேட்டுப்பாளையம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, வழக்கு நடந்து வருகிறது. அதனை தொடர்ந்து அப்பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நகர மன்ற உறுப்பினரான என்னை சந்தித்து "நாங்கள் நகராட்சி விதிக்கும் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைக்கும் கட்டுப்படுகிறோம் என்றும் எங்கள் மீது இருக்கும் வழக்குகளை வாபஸ் பெற்று எங்கள் கட்டிடத்திற்கு வரி விதித்து அனுமதி வழங்க பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று மனு கொடுத்தார்கள். எனவே, நகர மன்ற தலைவர் அவர்கள் நகர் மன்றக் கூட்டத்தில் சிறப்பு தனி தீர்மானம் வைத்து அந்த பள்ளிவாசல் மீது உள்ள வழக்கை நகராட்சி மனுதாரராக இருந்தால் அந்த வழக்கை வாபஸ் பெற்று அந்த பள்ளிவாசல் தொடர்ந்து செயல்பட அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் இந்த சிறப்பு தீர்மானத்தை அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் ஒருமனதாக நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>தீர்மான எண்: 694<br>தீர்மானம் : தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளின் படி மேல் நடவடிக்கை தொடர தீர்மானிக்கப்பட்டது. |
| 31 | **நகர்மன்றக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட மன்றப் பொருள்**<br>வார்டு எண் 3ல் சிறுமுகை ரோடு பகுதியில் சுமார் 25 குடியிருப்புகளுக்கு குடிநீர் சரிவர வருவதில்லை. எனவே, அப்பகுதியில் பழுதடைந்துள்ள பழைய மெயின் குழாயினை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000 க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>தீர்மான எண்: 695<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 32 | **நகர்மன்றக் கூட்டத்தில் திரு. R.மருதாச்சலம் நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண் 24 அவர்களால் கொண்டு வரப்பட்ட மன்றப் பொருள்** .<br>மேட்டுப்பாளையம் நகராட்சி வணிக வளாகம் கடை எண் 25 திரு.கோகுல் கிருஷ்ணன் 26.08.2017ல் இறந்துவிட்டதால் அவரது பெயரில் உள்ள கடையை அவரிடம் வேலை செய்து வந்த திரு.B.மல்லீஸ்வரன் அவர்களுக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>தீர்மான எண்: 696<br>தீர்மானம் : தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளின் படி மேல் நடவடிக்கை தொடர தீர்மானிக்கப்பட்டது |